[2012 ஏப்ரல் 10

அதற்குரிய முழு மதிப்பீட்டுத் தொகையில் 50 சதவிகிதம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கினால், உடனடியாக எந்தெந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த நிதியை வழங்குகிறார்களோ, அந்தப் பகுதிகளிலே அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும். அதேபோல நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கினாலும், அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும். இருவரும் அல்லாமல் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து அதற்குரிய நிதியைக் கொடுத்தாலும் அங்கே அதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்படும். ஆனால், அதிலே ஒரே ஒரு திருத்தம். தண்ணீர் தேங்கக்கூடிய பள்ளமான பகுதியில் மட்டும் மின் கம்பிகளைப் புதைவடமாக மாற்றுவதற்கு இயலாது என்பதையும், தண்ணீர் தேங்காத பகுதிகளில் இந்தப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும் இந்தச் சட்டமன்றத்திற்கு வருகை தந்து ஒரு வருடம் அனுபவம் இருக்கிறது. நான் பணம் கொடுக்கிறேன் என்றால், என்னுடைய பணத்திலிருந்து கொடுப்பதாக அர்த்தமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். அதோடு அந்த சப்ஜெக்ட் முடிந்துவிட்டது.

திரு. ப. பார்த்தசாரதி: அமைச்சர் அவர்கள் கேட்டதற்கு நானும் விளக்கம் சொல்ல வேண்டுமல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) Please sit down. (குறுக்கீடு) அந்த issue அப்போதே முடிந்துவிட்டது. அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போகாமல், திரும்பவும் அதையே எழுப்பிக் கொண்டிருந்தால் எப்படி? நான் time manage பண்ண வேண்டுமல்லவா?

வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 10]
62—

கூடுதல் குடிநீர்

***6322—திரு. எம்.கே. செல்வராஜு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக கூடுதல் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாநகராட்சிக்கு சேலம் ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சேலம் மாநகராட்சிக்கு அதாவது 2011–ல் வழங்கப்பட வேண்டிய குடிநீர் அளவு 53.042 எம்.எல்.டி. ஆகும். மக்கள்தொகை பெருக்கத்தின் காரணமாக தற்சமயம் மாநகராட்சியின் வேண்டுகோளின்படி நாளொன்றுக்கு சராசரியாக 60 எம்.எல்.டி. குடிநீர் சேலம் மாநகராட்சிக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கூடுதலாகக் குடிநீர் வழங்க தொழில்நுட்ப சாத்தியக் கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.

திரு. எம்.கே. செல்வராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த சங்கரன்கோவில் இடைத்தேர்தலில் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசி பெற்ற வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களையும் டெபாசிட் இழக்கச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மேலும் நடைபெறவுள்ள சட்டமன்ற இடைத்தேர்தலிலும் இதே நிலையையே உருவாக்க இருக்கின்ற எங்கள் தாயே, சித்திரைத் திருநாளை தமிழ்ப் புத்தாண்டாக மீண்டும் அறிவித்து உலகம் முழுவதும் உள்ள தமிழர்களின் நெஞ்சம் நிறைந்த மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

[2012 ஏப்ரல் 10

சேலம் மாநகராட்சியில் குடிநீர்ப் பற்றாக்குறை தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து 60 எம்.எல்.டி. குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இது போதுமானதாக இல்லை. மேலும் கூடுதலாகக் குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இல்லையென்று அறிவித்திருக்கிறார்கள். அதேநேரத்தில், தற்சமயம் சேலம் மாநகராட்சிக்குத் தேவைப்படும் குடிநீர் அளவு 105 எம்.எல்.டி. ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, கேள்விக்கு வாருங்கள்.

திரு. எம்.கே. செல்வராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கேள்வி சம்பந்தமாகத்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். கடந்த ஆட்சியாளர்களின் நிருவாகச் சீர்கேட்டினால், மேட்டூரிலிருந்து சேலம் மாநகராட்சிக்கு வரும் குடிநீரை ஓமலூர், பாலக்காரனூர் போன்ற பகுதிகளில், நெல்லுக்கும், புல்லுக்கும் எடுத்துக்கொள்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதனை ஆய்வு செய்து, சேலம் மாநகராட்சிக்கு சீரான குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சிக்கு இப்போது விநியோகிக்கப்படக்கூடிய குடிநீர் போதுமானதாக இல்லை என்பதற்காக, சேலம் மாநகராட்சியில் மேட்டூர் அருகிலுள்ள தொட்டில்பட்டி என்ற கிராமத்தில் 283 கோடி ரூபாய் முதலீட்டில் புதிதாக ஒரு குடிநீர்த் திட்டத்தைத் தொடங்குவதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதனுடைய அமைப்பு, அமைக்கப்பட்டிருக்கின்ற விதம் அடுத்த 30 ஆண்டுகளுக்குப் பின்னரும் 200 எம்.எல்.டி. தண்ணீர் கிடைக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது. தற்சமயம் வரக்கூடிய தண்ணீரிலிருந்து 155 எம்.எல்.டி. அந்தத் தண்ணீர் விடப்படுகிறது. அந்தத் திட்டம் நிறைவேறுகின்றபொழுது அதாவது வருகின்ற செப்டம்பர் மாதத்தில் 200 எம்.எல்.டி. தண்ணீர் கிடைக்கும்.

2012 ஏப்ரல் 10]

அதிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதுபோல 8,31,000 மக்கள்தொகை கொண்ட சேலம் மாநகராட்சிக்கு நிறைவான தண்ணீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.*

திரு. எம்.கே. செல்வராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

முற்பகல் 10—10

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமான நீராதாரம் இருந்தும் என் தொகுதிக்குட்பட்ட நெல்லியாளம் நகராட்சி, கூடலூர் நகராட்சி, தேவர்சோலை, O' Valley நடுவட்டம் பேரூராட்சிகள், கூடலூர் ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் ஒருங்கிணைந்த திட்டமும் சீரான விநியோகமும் இல்லாத காரணத்தால் கோடைக் காலங்களில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதைப் போக்க ஒருங்கிணைந்த திட்டமும், சீரான செயல் திட்டமும் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கோடைக் காலமாக இருக்கின்ற நிலையில் நிறைவான தண்ணீர் கிடைக்காது. அதற்காக ஒரு புதிய திட்டத்தைக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஒரு புதிய திட்டத்தை உருவாக்கிக் கொடுப்பதற்குக் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் ஆகும். இப்போதே கோடைக் காலம் ஆரம்பித்துவிட்டது. அதனால்*

உடனடியாக அந்தத் துறையின் அலுவலர்களையும், பொறியாளர்களையும் அனுப்பி அந்தப் பகுதியைப் பார்வையிடச் செய்து, கூடுதலாகத் தண்ணீர் கிடைப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்துக் கிராமங்களிலும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடே இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டை கொண்டுவருவோம் என்று சொல்லி, அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்படும் என்பதை அறிவித்து இருக்கின்றார்கள். அதேபோல இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கின்ற குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், சின்டெக்ஸ் தொட்டிகள் போன்றவற்றிலிருந்து தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொட்டிகளையெல்லாம் வாரம் ஒரு முறை சுத்தம் செய்து, மக்களுக்கு நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல தண்ணீர்த் தொட்டிகளையெல்லாம் உரிய காலத்திலே சுத்தம் செய்யும் பணி முறைப்படுத்தப்பட்டு அது ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனது துறை சம்பந்தமாக மீண்டும் ஆய்வு செய்தபோது ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே தமிழகத்திலே இதுபோன்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எத்தனை பழுதடைந்து இருக்கிறது? பழுதடைந்ததனால் அந்தத் தொட்டிகளுக்குத் தண்ணீர் ஏற்ற முடியவில்லையென்றாலும் அல்லது தண்ணீர் ஏற்றுகின்ற நேரத்தில்

2012 ஏப்ரல் 10]

தண்ணீர் கசிந்து ஏதாவது ஆபத்து ஏற்படும் என்கின்ற காரணத்தினாலும், உடனடியாக அவற்றின்மீது நடவடிக்கை எடுத்து புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்ட வேண்டுமென்று இந்த நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எனவே, அதுபோன்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இருந்தாலும் சீர் செய்யப்படும். பொதுவாக, 15 நாட்களுக்கு ஒரு முறை அல்லது மாதம் ஒரு முறை குடிதண்ணீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்து, குளோரின் போட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதியிலுள்ள கடலோரக் கிராமங்களான பிரதாபராமபுரம், விழுந்தமாவடி, புதுப்பள்ளி, வேட்டைக்காரன் இருப்பு ஆகிய கிராமங்களுக்குக் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் கிடைப்பதில் சிரமம் உள்ளது. திருப்பூண்டி கிராமத்தில் இரண்டு இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள தரைமட்டத் தொட்டி அமைத்துத் தந்தால், இக்கிராமங்களுக்குச் சிரமம் இல்லாமல் குடிநீர் கொடுக்கமுடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் தரைமட்டத் தொட்டியை அமைத்துத் தர முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாக குடிதண்ணீரைச் சேர்த்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்தப் பகுதியில் எவ்வளவு குடிதண்ணீர் கிடைக்கிறது? அப்படிக் கிடைக்கின்ற தண்ணீரில் எவ்வளவு போதாமல் இருக்கிறது? எந்தப் பகுதியிலிருந்து தண்ணீர் வருகிறது என்ற விவரங்களைச் சொன்னால், அதற்குரிய நடவடிக்கை எடுக்கமுடியும். ஏற்கெனவே கூட்டுக் குடிநீர்த் திட்டமாக இருந்து, அதற்கு வருகின்ற நீரின் அளவு ஒரே அளவாக இருந்து அல்லது கூடுதலாகக் கொடுக்கக்கூடிய நிலை இருந்தால் மாண்புமிகு*

[2012 ஏப்ரல் 10

உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல இரண்டு இலட்சம் கொள்ளளவு உள்ள ஒரு தொட்டி கட்டப்படும். அவ்வாறு இல்லாமல் ஏற்கெனவே ஒரு பதில் சொன்னேனே, இப்போது 200 எம்.எல்.டி. தண்ணீருக்காக அது வடிவமைக்கப்பட்டு போடப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது 155 எம்.எல்.டி. தண்ணீர்தான் எடுக்கப்படுகிறது. இன்னும் அதில் கூடுதலாகத் தண்ணீர் எடுக்கலாம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருந்தால், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும். அப்படி இல்லையென்று சொன்னால், புதியதாக ஒரு திட்டத்தை உருவாக்கி, அந்தப் பகுதிகளுக்குத் தேவையான குடிதண்ணீர் வழங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன். வேதாரண்யம் தொகுதியில் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சாலைகளை அகலப்படுத்துகிறோம் எனக் கூறி, தலைஞாயிறு ஒன்றியத்திற்குட்பட்ட 6 ஊராட்சிகளுக்கு நீர் கொண்டுவரும் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டக் குழாய்களைச் சேதப்படுத்திவிட்டனர். எனவே, கோவில்பத்து, வெள்ளப்பள்ளம், நாலுவேதபதி, கள்ளிமேடு, தாமரைப்பள்ளம், அவரிக்காடு ஆகிய பகுதிகளில் குழாய்களைச் சரி செய்து, கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிதண்ணீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையைப் பொறுத்தவரை, சாலைகளை அகலப்படுத்துகின்றபோது, நிச்சயமாக அந்தப் பகுதியில் இருக்கின்ற குழாய்கள் மாற்றி*

2012 ஏப்ரல் 10]

அமைக்கப்பட்டிருக்கும். அது விரைவாகச் சீரமைக்கப்படவில்லை என்று சொன்னால், விரைவாகச் சீரமைக்கப்பட்டு, முறையாக குடிநீர் அளிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் நகராட்சியில் செயல்பட்டு வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, குடிநீரை சுத்திகரித்து வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று வருகின்றபொழுதே அந்தக் குடிதண்ணீர் சுத்தப்படுத்தித்தான் அங்கேயிருக்கின்ற மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தயவுசெய்து கேள்வியைக் கேட்கின்றபொழுது, அந்தக் கேள்வியினுடைய மூலக்கரு எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், மணலி ஊராட்சியில், சாத்தங்குடி, பிரபாகரம், மணலி எம்.கே. நகர், மணலி பரிதிச்சேரி ஆகிய கிராமங்களுக்கு ஆழ்குழாய்க் கிணறுமூலம் 1,40,000 லிட்டர் தண்ணீர் எடுக்கப்பட்டு, விநியோகிக்கப்பட்டு வந்தது. சுனாமிக்குப் பின்னர், தற்சமயம் அந்தத் தண்ணீர் உப்பு நீராக மாறியுள்ளதால், திருத்துறைப்பூண்டி, வேலூர் ஊராட்சிக்கு அருகில், கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த்*

திட்டம் தண்டலச்சேரி கிராமம் வரை வருகிறது. ஆகவே, மணலி ஊராட்சிக்குக் குடிநீர் இணைப்பு வழங்கி, குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்துளைக் கிணற்றிலிருந்து எடுக்கப்படுகின்ற தண்ணீரை, ஒரு காலகட்டத்திற்கு மட்டும்தான் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. பல்வேறு காலகட்டங்களில் அந்தத் தண்ணீர் உவர்ப்பு நீராகவோ அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத நீராகவோ மாறி விடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை, நியாயமான கோரிக்கை. அந்தப் பகுதிக்கு வேண்டிய தண்ணீரை, அங்கே கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக வருகின்ற தண்ணீருடைய அளவைக் கருத்தில்கொண்டு, கூடுதலான தண்ணீர் வந்தால், நிச்சயமாக அந்தப் பகுதிக்குக் குடிதண்ணீர் அதிகமாக விநியோகிக்கப்படும். அவ்வாறு கூடுதலான தண்ணீர் வரவில்லை என்று சொன்னால், அந்தப் பகுதியினுடைய நிலைமையை ஆய்ந்து, அதற்கேற்றவாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

திருமதி எஸ். கணிதா சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட கருங்குழி பேரூராட்சியில் Sun Pharma Company இருக்கின்றது. அந்தக் கம்பெனியில் மாத்திரைகள் தயாரிக்கிறார்கள். அங்கே விடப்படும் கழிவுநீரால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் அப்பகுதி மக்களின் நலனைக் கருதி, கருங்குழி பேரூராட்சிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

2012 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைக்கின்ற கோரிக்கை நியாயமானது. தொழிற்சாலைகள் உள்ள பகுதியாக இருக்கின்றபட்சத்தில், நிச்சயமாக அந்தப் பகுதி நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டிருக்கும். அதனடிப்படையிலே, அந்த இடத்தை ஆய்வு செய்து, தேவைப்படின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் வாயிலாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்பொழுது நிலவும் மின்தடையின் காரணமாக சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட முடிவதில்லை. எனவே, அந்தப் பகுதியில் ஜெனரேட்டர் வழங்கினால்தான் சீரான குடிநீர் விநியோகம் செய்ய முடியும். எனவே, ஜெனரேட்டர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் ஒரு கோரிக்கை வைத்தேன். அதற்குரிய நடவடிக்கையை அவர் எடுத்துக்கொண்டு வருகிறார். பொதுவாக கூட்டுக் குடிநீர்த் திட்டம், நீராதாரங்கள் இருக்கின்ற இடங்களில் உள்ள மின் மோட்டார்கள் செயல்படுகின்ற நேரத்தில், அந்தத் தண்ணீர் ஏற்றப்பட்டு அடுத்த நிலைக்கு வரும்போது, அங்கேயிருக்கின்ற நீர் ஏற்றுவதற்குரிய மின் மோட்டார்களும் அங்கே செயல்பட வேண்டும். அப்போதுதான் இங்கே ஏற்றுகின்ற நீர் உரிய நேரத்தில் அங்கே வந்து அடைகின்றபோது அந்த மின் மோட்டாரும் பணி செய்தால்தான் அடுத்த இடத்திற்கு போகும். ஒரு இடத்தில்*

நின்றால்கூட, மின்சாரம் இல்லை என்று சொன்னால்கூட, ஏற்கெனவே நீரேற்றிய இடங்களில் இருக்கின்ற நீரின் அளவு அங்கே அதிகமாகி வேறுவிதமான நட்டம் ஏற்படும். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதுபோன்று வருகின்ற பகுதிகளுக்கு முறையாக, குறித்த காலத்தில் எப்பொழுதெல்லாம் மோட்டார்களைப் பயன்படுத்துகிறார்களோ அந்த நேரத்தில் மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதனடிப்படையிலே, அது முறையாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது வைத்த கோரிக்கை தேவையில்லை என்றே நான் கருதுகிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

63—

நெடுஞ்சாலைப் பணிகள்

***6625—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட கோயம்புத்தூர்–மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை விரைந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வி.சி. ஆறுக்குட்டி, அமைச்சர் பதில் சொன்ன பிறகு நீங்கள் பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*